VERITÉ RESEARCH
Strategic Analysis for Asia

# இலங்கையில் சமத்துவமாக தடுப்பூசி வழங்குதல் சார்ந்த பல்வேறுபட்ட தாக்கங்கள்

மார்ச் 2022

## முன்னுரை

- இது இலங்கையின் பன்முகத்தன்மை: தடுப்பூசி சமத்துவத்தின் மீதான தாக்கம் (DIVE) நிகழ்ச்சித் திட்டம் 2021-2022, என்னும் தலைப்பில் இரு பகுதிகளாக நடாத்தப்படும் ஆய்வுத் தொடரின் இறுதி ஆய்வாகும். இவ் ஆய்வினைச் செய்வதற்கான பொறுப்புரிமையை "சர்வதேச சிறுபான்மை உரிமைகள் குழு (Minority Rights Group International)" வழங்கியதோடு, வெரிட்டே ஊடகக் (Verité Media) குழுவினால் ஆய்வு முன்னெடுக்கப்பட்டது.

- இவ் ஆய்வானது இலங்கையின் பிரதான இனக் குழுக்களான சிங்கள, தமிழ் (இலங்கைத் தமிழர்கள் மற்றும் மலையகத் தமிழர்கள்)[1], மற்றும் முஸ்லிம் சமூகங்கள் மத்தியில், கோவிட்-19 தடுப்பூசி குறித்தான நம்பிக்கை, தடுப்பூசி ஏற்றல், மற்றும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளக் கூடிய தன்மை என்பவற்றுடன் தொடர்புடைய உரையாடல்களையும் மனப்பாங்குகளையும் பகுப்பாய்வு செய்தது. இவ் ஆய்வில் இருந்து கண்டறியப்பட்ட விடயங்களானது, வதந்திகள், தவறான தகவல்கள், மற்றும் அவநம்பிக்கையை எதிர்ப்பதோடு, இலங்கையில் தடுப்பூசி மீதான நம்பிக்கையையும், தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதனையும் ஆதரித்து மேம்படுத்துவதற்காக தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலமான ஒன்லைன் பிரச்சாரத்தின் ஊடாக அறிவிப்பதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இலங்கை 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதி அன்று கோவிட்-19 தடுப்பூசிகளை வழங்க ஆரம்பித்தது.[i] 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி காணப்பட்ட நிலவரங்களுக்கு இணங்க 16 வயதிற்கு மேற்பட்டவர்களின் சனத் தொகையில் 85.25% இனருக்கு, அல்லது மொத்த சனத் தொகையில் 64.41% இனருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.[ii] இலங்கை, 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இருந்து கோவிட்-19 தடுப்பூசியின் பூஸ்டர் டோஸ்களையும் வழங்க ஆரம்பித்தது. 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இருந்து கோவிட்-19 தடுப்பூசியின் பூஸ்டர் டோஸ்களை வழங்க ஆரம்பித்தது. கோவிட்-19 தடுப்பூசி வழங்கும் விகிதங்கள் இலங்கையில் அதிகமாகக் காணப்பட்ட போதிலும் தவறான தகவல்களின் விளைவாகத் தூண்டப்பட்ட தயக்கம் குறித்து சுகாதார அதிகாரிகள் தொடர்ந்தும் கவலைகளை வெளிப்படுத்தி உள்ளனர்.[iii]

- இப் பின்னணியில், ஆய்வானது சேகரிக்கப்பட்ட தகவல்களை இரண்டு முறைகளை உபயோகித்து மதிப்பீடு செய்தது. பிரதான இனக் குழுக்கள் மத்தியில் கோவிட்-19 தடுப்பூசி குறித்தான நம்பிக்கை, தடுப்பூசி ஏற்றல், மற்றும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளக் கூடிய தன்மை என்பவற்றுடன் தொடர்புடைய ஒன்லைன் மூலமான உரையாடல்களைக் கண்காணிக்கவும் புரிந்து கொள்ளவும் கூடிய வகையில் சமூக ஊடகங்களுக்கு செவிமடுத்தல் மற்றும் கண்காணிப்பு நுட்பங்களை உபயோகிப்பதில் ஈடுபடுதலானது முதலாவது முறையாகும். வெரிட்டே ஊடகக் குழுவினால் நடத்தப்பட்ட முதலாவது ஆய்வானது பேஸ்புக் (Facebook) மற்றும் டுவிட்டர் (Twitter) என்னும் சமூக ஊடகங்களில், 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி முதல் ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற உரையாடல்களை மதிப்பீடு செய்தது. இவ் ஆய்வில் இருந்து கண்டறியப்பட்ட விடயங்களானது, இலங்கையின் பன்முகத்தன்மை: தடுப்பூசி சமத்துவத்தின் மீதான தாக்கம் (DIVE) என்னும் தலைப்பில் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் வெளியிடப்பட்டது.

- சமூக ஊடகங்களை அணுகுதல் மற்றும், பயன்படுத்துவதில் காணப்படுகின்ற வரையறைகள் காரணமாக, சமூக ஊடகங்களைக் கண்காணிப்பதன் மூலம் கண்டறியப்பட்ட விடயங்களை முக்கோண மயப்படுத்துவதற்கான ஆய்வு ஒன்றை நடத்துதலானது இரண்டாவது முறையாகும். இலங்கை மத்திய வங்கியினால் வெளியடப்பட்ட 2020 ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கி அறிக்கைக்கு இணங்க 2020 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியை அடைகின்ற போது நாட்டில் இணையத் தளங்களை உபயோகிப்போரது வீதமானது நூறு நபர்களில் 79.9 நபர்களாகக் காணப்பட்டது.[iv] தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2020ம் ஆண்டின் அறிக்கையானது, 5 முதல் 69 வயதுக் கிடைப்பட்ட மக்கள் தொகையினரின் கணணி அறிவு தொடர்பாக அறிக்கையிடுகிறது.[v] அதன்படி, நகர்புறங்களில் வாழும் மக்கள் தொகையினரில் 54.5 வீதமானவர்களும், 33.3 வீதமான கிராமப்புற மக்களும், 13.9 வீதமான மலையக மக்களும் இணைய வசதியினைப் பயன்படுத்துகின்றனர்.[vi] குறிப்பாக, மலையக மக்கள் மத்தியில் மலையகத் தமிழ் மக்கள் மிகக் குறைந்த அளவில் இணைய வசதியினைப் பயன்படுத்துகின்றனர். எனவே, இவ் ஆய்வானது சமூக ஊடகங்களை உபயோகிக்காதவர்கள்

1 1837 முதல் 1939 வரையான காலப்குதியில், கோப்பி, தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களில் பணிபுரிவதற்காக இந்தியாவிலிருந்து குடியேறியவர்களின் வாரிசுகளிடமிருந்து தங்களைப் வித்தியாசப்படுத்துவதற்காக இலங்கைத் தமிழர்கள் என அடையாளப்படுத்தப்படுகின்றனர்.
இச் சமூகத்தினர், 'இந்தியத் தமிழர்', இந்திய வம்சாவழித் தமிழர்கள்' அல்லது 'தோட்டத் தமிழர்கள்' எனப் பல்வேறு வழிகளில் அடையாளப்படுத்தப்படுகின்றனர். இம் மக்கள் தங்களை மலையகத் தமிழர்கள் (ர்டைட ஊழரவெசல வுயஅடைள) என அடையாளப்படுத்துகின்றனர். இச் சமூகத்தினர் மத்திய மாகாணத்தில் தோட்டங்களில் பரவலாக காணப்படுகின்றனர்

அல்லது சமூக ஊடகங்களை அணுக முடியாதவர்கள், அவ்வாறில்லாவிடின் சமூக ஊடகங்கள் தொடர்பான கண்காணிப்பில் உட்படுத்தப்படாமல் விடுபட்ட மக்கள் குழுக்களைச் சென்றடைவதற்கு வெரிட்டே ஊடகக் குழுவினருக்கு, வாய்ப்பளித்தது.

- 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி முதல், 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி வரையிலான காலப்பகுதயில் 2,476 பதில் வழங்குநர்கள் மத்தியில் நடத்தப்பட்ட ஆய்வின் பிரதான அவதானிப்புக்களை நடைமுறை ஆய்வானது சுருக்கமாக எடுத்துரைக்கின்றது. இரண்டு முறைகளினூடாகவும் பெறப்பட்ட தரவுகளுக்கிடையிலான ஒற்றுமை மற்றும் வேற்றுமைகளை காட்டுவதற்கு, முந்தைய சமூக ஊடகக் கண்காணிப்பு அறிக்கையின் தரவுகளைத் தேவைப்படும் இடங்களில் இவ் அறிக்கை பயன்படுத்துகின்றது.

- தவறான தகவல்கள், மற்றும் அவநம்பிக்கையை எதிர்ப்பதோடு, இலங்கையில் தடுப்பூசி மீதான நம்பிக்கையையும், தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதனையும் ஆதரித்து மேம்படுத்துவதற்காக நடத்தப்பட்ட ஒன்லைன் பிரச்சாரத்தைப் பற்றியும் இவ் ஆய்வு விபரிக்கின்றது. சமூக ஊடகங்களைக் கண்காணித்தல் மற்றும் சமூக ஊடகங்களின் ஆய்வில் இருந்து சேகரிக்கப்பட்ட தரவுகள் மூலம் பிரச்சாரக் கட்டமைப்பைப் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆய்வு முறை

### ஆய்வு வடிவமைப்பும் ஆய்வு மாதிரிகளின் கட்டுக்கோப்பும்

- சிங்கள, தமிழ், மற்றும் முஸ்லிம் சமூகங்கள் மத்தியில், காணப்படும் கோவிட்-19 தடுப்பூசி குறித்தான நம்பிக்கை, தடுப்பூசி ஏற்றல், மற்றும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளக் கூடிய தன்மை என்பவற்றுடன் தொடர்புடைய கருத்துக்களையும் மனப்பாங்குகளையும் பகுப்பாய்வு செய்வதற்காக இவ் ஆய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது. இந் நோக்கத்திற்காக ஆய்வில் உள்ளடக்கப்பட்டுள்ள கேள்விகள் என்பன, கோவிட்-19 தடுப்பூசி மீதான நம்பிக்கை, தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுதல், மற்றும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு, தொடர்பான ஏனைய காரணிகளுடன்; தவறான தகவல்களின் தாக்கம், அதிகாரிகள் மீதான நம்பிக்கை, மற்றும் பதில் வழங்குநர்களது வாழ்க்கையில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் போன்ற விடயங்களைப் பரீட்சித்துப் பார்க்கும் வகையில் அமைந்துள்ளது. மேலும், இவ் ஆய்வானது, பல்வேறுபட்ட சமூகங்களைச் சேர்ந்த மக்களது பண்புகள், மனதளவில் அவர்கள் கொண்டுள்ள கருத்துக்கள், மனப்பாங்குகள் என்பவற்றை மதிப்பீடு செய்யும் வகையில் அத்துடன் தொடர்புடைய வகையில் அமைந்த மக்களது பண்புகள் சார்ந்த தரவுகளையும் (வயது, தொழில், கல்விமட்டம்) சேகரித்துள்ளது.

- 18 வயதான அல்லது அதற்கு மேற்பட்ட வயதைக் கொண்ட 2,479 பதில்வழங்குநர்களிடம் இருந்து இவ் ஆய்விற்கான தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி முதல் 2022 ஆம் அண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியை உள்ளடக்கிய இவ் ஆய்வானது, சிங்கள மற்றும் தமிழ் மொழியில் நேருக்குநேராக நடத்தப்பட்டுள்ளது.

- இலங்கையில் உள்ள 22 மாவட்டங்களில் இருந்தும் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்ளும் வகையில் அமைந்த ஒரே நோக்கத்துடன் கூடிய ஆய்வு மாதிரித் தெரிவு முறை ஒன்று பயன்படுத்தப்பட்டுள்ளது. குறைந்தளவான தடுப்பூசி ஏற்றல் விகிதத்தைக் கொண்டிருந்தால் அல்லது ஆய்விற்காக கருத்தில் கொள்ளப்பட்ட ஏதாவதொரு இனக் குழுவின் செறிவு அதிகமாகக் காணப்பட்டால் அம் மாவட்டங்கள் ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்டன.

- பெரும்பான்மைச் சிங்கள சமூகத்துடன் ஒப்பிடப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக, தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் தமிழ் மற்றும் முஸ்லிம் பதில் வழங்குநர்களது மாதிரியானது மிகை மாதிரியாகக் காணப்பட்டது. இம் மிகை மாதிரியானது, ஆய்வின் போது மதிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு இனக்குழுவினதும் சம விகிதத்தை அடைவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதற்கிணங்க n=2,479, மாதிரிகளில் பதில் வழங்கியவர்களில் 32 வீதமானவர்கள் சிங்களவர்கள், 29 வீதமானவர்கள் இலங்கைத் தமிழர்கள், 3 வீதமானவர்கள் மலையத் தமிழர்கள், 36 வீதமானவர்கள் முஸ்லிம்கள்.

- முதன்மையான மாதிரி அலகானது (Primary Sampling Unit) மாவட்ட மட்டத்தில் அமைக்கப்பட்டது. குறைந்தளவான கோவிட்-19 தடுப்பூசி ஏற்றல் விகிதங்களைக் கொண்ட கிராமசேவையாளர் பிரிவுகளை இனங்காண்பதற்காக பொதுச் சுகாதார பரிசோதகர்களுடன் இணைந்து, முதன்மையான மாதிரி அலகுகளுக்குள் பலதரப்பட்ட உப மாதிரி அலகுகள் உருவாக்கப்பட்டன.

- பதில் வழங்குநர்களை இனங் காண்பதற்கு அங்கொன்றும் இங்கொன்றுமாக எடுக்கப்படும் ஒரு சீரற்ற மாதிரிகளும் (random sample), பனிப்பந்து (snowball) மாதிரிகளும் ஒன்றாகச் சேர்த்து பயன்படுத்தப்பட்டுள்ளன. இறுதிப் பிறந்த தினக் கொண்டாட்டம் என்னும் முறையைப் பயன்படுத்தி ஒவ்வொரு குடும்பத்தில் இருந்தும் பதில் வழங்குநர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டார். அதாவது மிகச் சமீபத்தில் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடிய குடும்ப உறுப்பினரே இவ் ஆய்வில் பங்குபற்றுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### தரவு சேகரிப்பில் வரையறைகள்

- ஆய்வில் இருந்து கண்டறியப்பட்ட விடயங்களானவை, 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி முதல் 2022 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட தரவுகளுடன் தொடர்புடையவை. எனவே கோவிட்-19 தடுப்பூசி குறித்தான பொது மக்களது கருத்துக்களில் அடுத்தடுத்து வரும் மாற்றங்கள் குறித்து மதிப்பீடு செய்யவில்லை. எமது நாட்டில் கோவிட்-19 நோயாளர்களின் எண்ணிக்கை மற்றும் இறப்புக்களில் அதிகரிப்பு ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்த டெல்டா (Delta Variant) தொற்றுப் பரவலுக்குப் பின்னரே இக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.[vii] நாட்டில் கோவிட்-19 நோயாளர்களதும் கோவிட் விளைவாக

ஏற்பட்ட மரணங்களினதும் வீதத்தில் அதிகரிப்பு ஏற்பட்டதனைத் தொடர்ந்து முப்படையினராலும், சுகாதாரத் துறையினராலும் நாட்டு மக்களுக்கு தடுப்பூசி வழங்குவதனை மேலும் துரிதப்படுத்தியது.[viii] இச் சூழ்நிலையானது, கேள்விகளுக்கான சில பதில்களில் பாதிப்பை ஏற்படுத்தி இருக்கலாம்.

### புள்ளிவிபரப் பகுப்பாய்வு

தேவையான துறைகளில் பதில் வழங்காமல் விடப்பட்ட அல்லது “பதில் வழங்காமல் இருக்க விரும்புகின்றேன்” என்னும் பதிலை வழங்கிய, பதில் வழங்குனர்களை நீக்குவதன் மூலம் ஆய்வின் தரவுகள் தெளிவுபடுத்தப்பட்டதோடு பகுப்பாய்வு செய்யப்பட்ட மாதிரியானது 2,476 பதில் வழங்குனர்கள் மத்தியில் கொண்டுவரப்பட்டது. “தடுப்பூசி பெற்றுக் கொள்ளப்படாமைக்கான காரணம்” போன்ற திறந்த முனைப் பதில்கள் ஒன்றாகத் தொகுக்கப்பட்டு மீண்டும் குறியீட்டெண் இடப்பட்டது. தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது தொடர்பான தயக்கம் அல்லது, அடிக்கடி மாற்றத்திற்கு உட்படும் தன்மை மிக்க மாறிகள், கோவிட்-19 தடுப்பூசிகள் தொடர்பான தவறான தகவல்கள் மற்றும் ஆர்வத்திற்கு இடையிலான மாற்றங்களை மதிப்பிடுவதற்கு, Chi – squared முறை பயன்படுத்தப்பட்டது. புள்ளிவிபர ரீதியாகக் குறிப்பிடத்தக்க முடிவுகளைக் குறிப்பதற்கு 0.05 க்கும் குறைவான p பெறுமதி எடுக்கப்பட்டது. மாறிகளுக்கு இடையில் காணப்படுகின்ற தொடர்பு நிறுவப்பட்ட பின்னர் முரண்பாட்டு விகிதங்கள் கணக்கிடப்பட்டன. தவறான தகவலை நோக்கி அதிகளவான பங்களிப்பை வழங்கும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் மூலங்களை இனங்காண்பதற்கு கணிப்பியல் திட்டம் சார்ந்த பின்னடைவு முறைகள் (Logistic regression models) பயன்படுத்தப்பட்டன. தவறான தகவல்களுடன் (Chi – squared முறையைப் பயன்படுத்தி) அதிகளவான தொடர்பைக் கொண்டுள்ள தகவல் மூலங்களானது குறிப்பிட்ட ஒரு மாறிக்காக முதலாவதாக தெரிவு செய்யப்பட்டது. McFadden's R-Squared முறையைப் பயன்படுத்தி மிகச் சிறப்பாகப் பொருந்தும் மாதிரிகள் மதிப்பீடு செய்யப்பட்டன. புள்ளிவிபர ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களின் மூலங்களானவை, (0.05 க்கும் குறைவான p மதிப்பைக் கொண்ட குணகங்கள்) வழங்கப்பட்டுள்ள விதத்திலான தவறான தகவல்களை வழங்கிய முதன்மைப் பங்களிப்பாளராக தெரிவுசெய்யப்பட்டனர். வழங்கப்பட்ட மாதிரியில் இருந்து மிகப்பெரிய குணகங்களைக் கொண்ட மாறிகளை அடிப்படையாகக் கொண்டு அதிகளவான பங்களிப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

## ஆய்வில் இருந்து கண்டறியப்பட்ட விடயங்களின் சாராம்சம்

### கோவிட்-19 தடுப்பூசி மீதான நம்பிக்கையும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுதலும்

- ஒட்டுமொத்தமாகப் பார்க்குமிடத்து, பதில் வழங்குநர்களில் மிகப் பெரும்பான்மையினர், 95.6 வீதமான பதில் வழங்குநர்கள் (n=2,476) குறைந்த பட்சம் ஒரு டோஸ் கோவிட்-19 தடுப்பூசியையாவது பெற்றவர்களாக விளங்குகின்றனர். எவ்வாறாயினும், குறைந்த பட்சம் ஒரு டோஸ் கோவிட்-19 தடுப்பூசியையாவது பெற்றவர்களில் 38 வீதமானவர்கள் தடுப்பசியைப பெற்றுக் கொள்வதற்கு முன்னரே எத் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது என்னும் விடயத்தில் தீர்மானங்களைக் கொண்டவர்களாக விளங்கினர்.
- பதில் வழங்குநர்களில் தமிழ் மற்றும் முஸ்லிம்கள் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாமல் இருப்பதற்கான வாய்ப்பு 3 மடங்கு அதிகமாகக் காணப்படுகின்றது. பதில் வழங்கிய சிங்களவர்களோடு ஒப்பிடுகையில், தமிழ் மற்றும் முஸ்லிம் இனத்தவர்கள் ஒரு டோஸ் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் தயக்கத்தை வெளிப்படுத்தும் தன்மையானது 5 மடங்கு அதிகமாகக் காணப்படுகின்றது. இத் தரவுகள், டுவிட்டர் மற்றும் பேஸ்புக்கில் 2021 ஜனவரி முதல் ஒக்டோபர் வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கண்டறியப்பட்ட விடயங்களுடன் ஒத்துப்போகின்றது. சிங்கள பாவனையாளர்களுடன் ஒப்பிடும்போது, தமிழ் மற்றும் முஸ்லிம் பாவனையாளர்கள் சமூக ஊடகப் பாவனையாளர்கள் மத்தியில் மிகக் குறைந்த நம்பிக்கை அல்லது நம்பிக்கையின்மை வெளிப்பட்டது.
- ஒரு டோஸ் தடுப்பூசியையாவது பெற்றுக் கொள்வதற்கு முன்னர் இளவயதினர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாமல் இருத்தல் அல்லது தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதில் தயக்கம் காட்டுதல் போன்றவற்றுக்கான வாய்ப்பு அதிகம்.
- தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்கு தயாராக இருந்த போதிலும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாமலே இருந்தவர்கள், தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதனைத் தடுக்கும் வகையிமைந்த வெளிவாரியான தடைகளை எதிர்நோக்கி இருக்கலாம். (உதாரணம்: தடுப்பூசி வழங்கும் இடத்திற்குச் செல்வதற்கு நேரம் இல்லாமை).
- இதே பதில்வழங்குநர்கள் - தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்கு தயாராக இருந்த போதிலும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாமலே இருந்தவர்கள், குறிப்பிட்ட சில தடுப்பூசி வகைகளைப் பெற்றுக் கொள்வதில் அதிக விருப்பத்தைக் கொண்டிருந்தனர். அதாவது சில தடுப்பூசி வகைகளைப் பெற்றுக் கொள்வதில் விருப்பம் இல்லாதிருந்தனர். சமூக ஊடகத்தில், முஸ்லிம்களுடன் ஒப்படும்போது, சிங்கள மற்றும் தமிழர்கள் மத்தியில் குறிப்பிட்ட தடுப்பூசி தொடர்பில் தெரிவு காணப்பட்டது.

### தவறான தகவல்கள்

- பதில் வழங்குநர்களில் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாமல் இருந்தவர்கள், கோவிட்-19 தடுப்பூசி தொடர்பாக, உடல் நலம் சார்ந்த தவறான தகவல்களையும் (இனப்பெருக்கம் மற்றும் பாலியல் ரீதியான பக்கவிளைவுகள் தோன்றும் போன்றவை); அரசியல் மயமாக்கப்பட்ட செய்திகளையும் (அரசாங்கங்கள் தொடர்பான தேசிய அல்லது சர்வதேச ரீதியான சதிக் கோட்பாடுகள் போன்றவை) கவனித்திருக்கலாம் என தரவுகள் பரிந்துரைக்கின்றன. இத் தவறான தகவல்களானவை, “நண்பர்கள் மற்றும் குடும்பத்தவர்களோடு உரையாடுவதன்” மூலம் பிரதானமாகப் பரவி உள்ளன.
- தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதனால், ஏற்படக் கூடிய இனப்பெருக்க மற்றும் பாலியல் ரீதியான பக்கவிளைவுகளைப் பற்றிய தவறான கருத்துக்களை, சிங்கள மற்றும் தமிழ்

சமூகத்தைச் சேர்ந்த பதில் வழங்குநர்களுடன் ஒப்பிடுகையில் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த பதில் வழங்குநர்கள் நம்புவதற்கான வாய்ப்புக்கள் அதிகம். அதேபோல, பேஸ்புக் மற்றும் டுவிட்டர் 2021 ஜனவரி முதல் ஒக்டோபர் வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கண்டறியப்பட்ட தரவுகள் காட்டுவது, சிங்கள மற்றும் தமிழர்களுடன் ஒப்பிடும்போது, முஸ்லிம் பாவனையாளர்கள் அதிக சந்தேகத்தை வெளிப்படுத்தினர்.

- ஒட்டுமொத்தமாக சிறுபான்மை இனக் குழுக்களைச் சேர்ந்த பதில் வழங்குநர்கள் (இலங்கைத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள்) கோவிட்-19 தடுப்பூசியைப் பற்றியும் தடுப்பூசி வழங்கப்படும் நடைமுறையைப் பற்றியும் கூறப்படும் அரசியல் மயமாக்கப்பட்ட செய்திகளை நம்புவதற்கான வாய்ப்புக்கள் அதிகம்.


## அதிகாரிகள் மீதான நம்பிக்கை

- கோவிட்-19 தடுப்பூசிகளை விநியோகித்தல், மற்றும் தடுப்பூசி ஏற்றல் தொடர்பான விடயங்களில் மக்களின் சீரிய நலனில் (பொதுமக்களின் சீரிய நலனை மனதில் கொள்ளுதல்) அக்கறை செலுத்துதல் குறித்தான விடயங்களில் பதில் வழங்குநர்கள், அரசியல் பிரமுகர்களிலும் பார்க்க அரசாங்க துறையைச் சேர்ந்த சுகாதாரப் பணியாளர்கள் மீது அதிகளவில் நம்பிக்கை வைத்துள்ளனர்.
- கோவிட்-19 தடுப்பூசிகளை விநியோகித்தல், மற்றும் தடுப்பூசி ஏற்றல் தொடர்பான விடயங்களில் பொது மக்களின் சீரிய நலனைக் கருத்தில் கொண்டு செயலாற்றுவது தொடர்பான விடயங்களில் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த பதில் வழங்குநர்கள் முப்படைகள் மற்றும் தமது பிராந்திய அரசாங்க அதிகாரிகள் மீது குறைந்தளவான நம்பிக்கையையே கொண்டிருந்தனர்.

## ஆய்வில் இருந்து கண்டறியப்பட்ட விடயங்கள்

- தமது கோவிட்-19 தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்ட நிலைமைகளின் அடிப்படையில், பதில்வழங்குநர்களின் பரம்பலை விளக்கப்படம் 1 எடுத்துக்காட்டுகின்றது. பதில் வழங்குநர்களில் மிகப் பெரும்பான்மையினர், 95.6 வீதமான பதில் வழங்குநர்கள் (n=2,476) குறைந்த பட்சம் ஒரு டோஸ் கோவிட்-19 தடுப்பூசியையாவது பெற்றவர்களாக விளங்குகின்றனர். தடுப்பூசியைப் பெற்றுக் கொண்ட பதில் வழங்குநர்கள் இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர்: (1) எத் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது என்னும் விடயம் குறித்து, முன்கூட்டியே எவ்விதமான தெரிவுகளையும் மேற்கொள்ளாதவர்கள் (58%) (2) தடுப்பூசியைப் பெற்றுக் கொண்ட போதிலும் அதனைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் எத் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது என்பது தொடர்பில் தமக்கே உரித்தான தெரிவுகளைக் கொண்டவர்கள் (38%)

**விளக்கப்படம் 1:** தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்ட நிலைமைகளின் அடிப்படையில், பதில்வழங்குநர்களின் பரம்பல்




*ஆய்வில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான பதில்கள்:*

*கேள்வி.1.2 உங்களையும் சேர்த்து இக் குடும்பத்தில் உள்ள குடும்ப அங்கத்தவர்களில் எத்தனைபேர் தடுப்பூசியின் ஒரு டோசையாவது பெற்றுக் கொண்டுள்ளனர்? (அனைத்து பதில் வழங்குநர்களிடமும் கேட்கப்பட்டது பதில் வழங்கியோரின் மொத்த மாதிரி n = 2,476*

*கேள்வி.1.4. தடுப்பூசியின் ஒரு டோசையாவது பெற்றுக் கொள்வதற்கு முன்னர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது தொடர்பான தெரிவுகளை மேற்கொள்ளக் கூடியதாக இருந்ததா? (ஆகக் குறைந்தது தடுப்பூசியின் ஒரு டோசையாவது பெற்றுக் கொண்டவர்களிடத்தில் கேட்கப்பட்டது)*

*கேள்வி.1.7. தடுப்பூசி உங்களுக்குக் கிடைக்குமாக இருந்தால் நீங்கள் அதனைப் பெற்றுக் கொள்ளத் தயாரா? (ஆகக் குறைந்தது தடுப்பூசியின் ஒரு டோசையாவது பெற்றுக் கொள்ளாதவர்களிடத்தில் கேட்கப்பட்டது)*

*குறிப்பு: இவ் ஆய்வு 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22ல் இருந்து 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 வரையில் நடத்தப்பட்டது*

- தடுப்பூசியைப் பெற்றுக் கொண்ட பதில்வழங்குநர்களில் 4 வீதமானவர்கள் மேலும் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர்.[2] அதற்கிணங்க தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாத, ஆனால் பெற்றுக் கொள்ளத் தயாராக உள்ள 38 வீதமானவர்கள் குழு 1 இலும், தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாமல் உள்ளதோடு தடுப்பூசி பெற்றுக் கொள்ளத் தயாராக இல்லாத 35 வீதமானவர்கள் குழு 2 இலும், தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாமல் உள்ளதோடு தடுப்பூசி பெற்றுக் கொள்ளும் விடயத்தில் உறுதியாக இல்லாத 27 வீதமானவர்கள் குழு 3 இலும், உள்ளடக்கப்பட்டனர்.
- தடுப்பூசி குறித்தான நம்பிக்கை தொடர்பாக தரவு சார்ந்த சில அனுமானங்களைச் செய்வதற்கு பதில் வழங்குநர்களில் தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்கள் அடங்கி உள்ள குழு மற்றும் தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்கள் அடங்கி உள்ள குழுவின் மீது நம்பிக்கை வைத்திருந்தது. இதற்கிணங்க எத் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது என்னும் விடயம் குறித்து, முன்கூட்டியே எவ்விதமான தெரிவுகளையும் மேற்கொள்ளாமல் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுதலானது, ஆகக் கூடிய நம்பிக்கைக்கான சுட்டிக்காட்டி என பகுப்பாய்வு அனுமானிக்குமாக இருந்தால்; பதில் வழங்குநர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் கோவிட்-19 தடுப்பூசிகள் மீது அதிக நம்பிக்கையை வெளிப்படுத்தி உள்ளதாகத் தெரிகிறது.
- இதற்கு நேர்மாறாக (a) தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாத போதிலும் பெற்றுக் கொள்ளத் தயாராக உள்ளமையானது, ஆகக் குறைந்த நம்பிக்கைக்கான சுட்டிக்காட்டியாகவும்; (b) தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்கு விரும்பாமையானது,


2 தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாத பதிலளிப்பவர்களின் மாதிரி அளவானது, இனம் மற்றும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாமல் இருப்பதற்கான பிற சாதிதியமான பங்களிப்புக் காரணிகளின் அடிப்படையில், இக் குழுவினர்மீதான மேலதிக ஆய்வைக் கட்டுப்படுத்துகின்றது என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

தடுப்பூசி மீதான நம்பிக்கையீனத்தைச் சுட்டிக் காட்டுகின்றது என பகுப்பாய்வு அனுமானிக்குமாக இருந்தால்; அதிகளவான தனிநபர்கள் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளத் தயங்குவது போன்று காணப்படும். தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதில் தயக்கம் காட்டுபவர்களின் குணாதிசயங்களைப் புரிந்து கொள்வதற்கு மேலும் பகுப்பாய்வு வழங்கப்படுகின்றது.

## கோவிட் 19 தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுதல்: தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாமல் இருப்பவர்கள் யார்?

- ஆய்வு செய்யப்பட்ட அனைத்து இனச் சமூகங்களிலும் கோவிட்-19 தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதானது அதிகமாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும் சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த பதில் வழங்குநர்கள் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாமல் இருப்பதனைப் பெரிதும் காணக்கூடியதாக இருந்தது. அது மட்டுமன்றி தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னரே எத் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும் போன்ற விடயங்களில் தீர்மானங்களை எடுத்திருந்த நிலையினையும் காண முடிந்தது. ஆய்வில் இருந்து கண்டறியப்பட்ட இவ்விடயங்கள் விளக்கப் படம் 2 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 2:** பதில் வழங்குநர்களை இனக்குழுக்களாக வகைப்படுத்தலும் அவர்கள் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டுள்ளமை தொடர்பான நிலைமையும்





*குறிப்பு: இவ் ஆய்வு 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இருந்து 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரையில் நடத்தப்பட்டது*

- சிங்கள சமூகத்தைச் சேர்ந்த பதில் வழங்குநர்களுடன் ஒப்பிடுகையில், தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த பதில் வழங்குநர்கள் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாமல் இருப்பதற்கான வாய்ப்பு 3 மடங்கு அதிகமானதாகவும், தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் தயக்கம் காட்டும் வாய்ப்பானது 5 மடங்கு அதிகமானதாகவும் காணப்படுவதாக ஒற்றைச்சார்பு விகிதக் கணிப்பீடொன்று (odds ratio calculation) எடுத்துக் காட்டுகின்றது.

- முன்னர், 2021 ஜனவரி முதல் ஒக்ரோபர் வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சமூக ஊடக ஆய்வில் கண்டறியப்பட்ட தரவுகள் இத் தரவுகளோடு ஒத்துப்போகின்றது. அதன்படி, சிங்கள சமூகத்தைச் சேர்ந்த பதில் வழங்குநர்களுடன் ஒப்பிடுகையில், சிறுபான்மையின சமூகத்தினர் மத்தியில் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்கு தயக்கம் காட்டுவது அதிகமானதாகவும் காணப்படுகின்றது.

- பதில் வழங்குநர்களது வயதிற்கும் அவர்கள் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்கு தயங்குவதற்கும் இடையில் ஒரு நேர்மாறான தொடர்பு காணப்படுவதனை இத் தரவுகள் சுட்டிக் காட்டுகின்றது. அதாவது, இள வயதினர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்குத் தயக்கம் காட்டுவது அதிகமாகக் காணப்படுகின்றது. எனவே பதில் வழங்குநர்களில் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாமல் இருப்பவர்கள் இள வயதினராக இருப்பதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இதற்கு நேர்மாறாக தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னரே எத் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும் போன்ற விடயங்களில் எந்த ஒரு தீர்மானத்தையும் எடுக்காமல் ஆகக் குறைந்தது முதலாவது தடுப்பூசியையாவது பெற்றக் கொண்டவர்கள் ஓரளவு வயதானவர்களாகக் காணப்படுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. ஆய்வில் இருந்து கண்டறியப்பட்ட இவ்விடயங்கள் விளக்கப் படம் 3 இல் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**விளக்கப்படம் 3:** பதில் வழங்குநர்களை இனக்குழுக்களாக வகைப்படுத்தலும் அவர்கள் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டுள்ளமை தொடர்பான நிலைமையும்




*கேள்வி 1.6 க்கான பதில்கள். பின்வரும் நடைமுறைக் காரணங்களுக்காக நீங்கள் தடுப்பூசியைப் பெறவில்லையா? எனும் கேள்வி தடுப்பூசி குறைந்தது ஒரு டோஸையாவது பெறாத, பதிலளித்தவர்களிடமிருந்து கேட்கப்பட்டது.*

*குறிப்பு:*

*ஒரு பதிலளிப்பவர் ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்களைக் கூறலாம். எனவே, தேர்ந்தெடுக்கப்பட்ட காரணங்களின் கூட்டுத்தொகையானது பதிலளித்தவர்களின் மொத்த எண்ணிக்கையை விட அதிகமாக இருக்கலாம்.*


*இந்த ஆய்வு 22 டிசம்பர் 2021 முதல் ஜனவரி 1, 2022 வரை நடத்தப்பட்டது*

- மதிப்பீட்டினூடாக பெறப்பட்ட தரவுகளை அட்டவணைப்படுத்துவதன் மூலம் அனைத்து இனச் சமூகங்களையும் சேர்ந்த பதில் வழங்குநர்கள் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகளை அணுகுவதனைக் கட்டுபடுத்தக் கூடிய வெளிவாரியான தடைகளை ஆய்வு உற்று நோக்கியது (விளக்கப்படம் 3 ஐப் பார்க்கவும்). முக்கியமான தடைகளில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன: தடுப்பூசி வழங்கும் நிலையங்களுக்கு செல்லுவதற்கு நேரம் இல்லாமல் இருத்தல் (13%), தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாமல் இருப்பதற்கான வெளிப்புற அழுத்தம் (7%), தடுப்பூசி வழங்கும்

நிலையத்தில் இருந்து தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை (6%), தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்கு நீண்ட நேரமாக வரிசையில் நிற்க வேண்டிய நிலை (6%).

- மதிப்பீட்டுடன் தொடர்புடைய தரவுகளின் பகுப்பாய்வானது, அனைத்து இனச் சமூகங்களையும் சேர்ந்த பதில் வழங்குநர்களில் 65% மானவர்கள், தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாத ஆனால் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்கு தயாராக உள்ளவர்கள் தாம் பெற்றுக் கொள்ள விரும்பும் தடுப்பூசியைத் தெரிவு செய்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் அதிகம் எனத் தெரியவந்துள்ளது. இதற்கு நேர்மாறாக தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்களில் 38% மானவர்களும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாத ஆனால் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்கு தயாராக உள்ளவர்களில் 45 வீதமானவர்களும் தடுப்பூசியைத் தெரிவு செய்து கொள்ளும் வாய்ப்பைக் கொண்டவர்கள் (விளக்கப்படம் 5 ஐப் பார்க்கவும்). பதில் வழங்குநர்கள் குறிப்பிட்ட சில வகையான தடுப்பூசிகளை விருப்பத் தெரிவுகளாகக் கொண்டிருத்தலானது, அவர்கள் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாமல் இருப்பதற்குப் பங்களிப்பு நல்கும் காரணமாக உள்ளதாகத் தெரிகிறது.
- குறிப்பாக, அனைத்து இன சமூகத்தவர்களின் சமூக ஊடக உள்ளீடுகளும் ஒரே மாதிரியாகக் காணப்பட்டாலும், முஸ்லிம் சமூகத்தினரை விட, சிங்கள மற்றும் தமிழர்கள் மத்தியில் தமக்கு விருப்பமான தடுப்பூசித் தெரிவு தொடர்பில் அதிக உறுதிப்பாடு காணப்படுவதை தடுப்பூசி நாமம் மீதான விருப்பத்தேர்வு தொடர்பான சமூக ஊடகத் தரவுகள் காண்பிக்கின்றன.


**விளக்கப்படம் 4:** தடுப்பூசி வகைகளுக்கு இணங்க தடுப்பூசியைத் தெரிவு செய்தல் (தடுப்பூசித் தெரிவை மேற்கொண்ட நிலை அல்லது குழு)




*குறிப்பு: இவ் ஆய்வு 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இருந்து 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரையில் நடத்தப்பட்டது*

- பதில் வழங்குநர்கள் எல்லா வகையான தடுப்பூசிகளிலும், சினோபார்ம் (Sinopharm) தடுப்பூசிக்கான தெரிவானது பாதகமானதாக காணப்படுகின்றது என்பதனை விளக்கப்படம் 5 எடுத்துக் காட்டுகின்றது. மற்றொரு விதமாகக் கூறுவதாக இருந்தால் பதில் வழங்குநர்களில், நாட்டில் மிகவும் பரவலாக வழங்கப்பட்டு வரும் சினோபார்ம் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்கு மிகக் குறைவானவர்களே விரும்புகின்றனர். இத் தரவுகளானவை, சமூக ஊடக கண்காணிப்புத் தொடர்பான தரவுகளுடன் ஒத்துப்போகின்றது. அதாவது, சீனத் தயாரிப்பான சினோபார்ம் தடுப்பூசியைவிட அமெரிக்க நிறுவனத் தயாரிப்பான பைசர் (Pfizer) உம் அல்லது மொடோர்னா (Moderna) தடுப்பூசிகள் மீதான விருப்பத்தேர்வு மிக அதிகமாக அனைத்து இன சமூகத்தினர் மத்தியில் காணப்படுகின்றது.
- குறிப்பிடத்தக்க வகையில், தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாத தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்குத் தயாராக இருந்தவர்களில் 53 வீதமானவர்கள் தாம் பெற்றுக் கொள்ள விரும்பும் வாய்ப்பு மிகக் குறைவாகக் காணப்படுகின்ற தடுப்பூசியாக சினோபார்ம் தடுப்பூசியைத் தெரிவு செய்தனர். எனவே, ஆய்வில் இருந்து கண்டறியப்பட்ட விடயங்களை உள்ளடக்கிய விளக்கப்படம் 5 இல் இருந்து தெரிய வருவது என்னவெனின், சினோபார்ம் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதில் விரும்பம் இல்லாமையானது, பதில் வழங்குநர்கள் மத்தியில் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதில் தயக்கத்தைத் தோற்றுவிப்பதற்கு பங்களிப்பு செய்திருக்கலாம் எனக் கூறுகின்றன.

**விளக்கப்படம் 5:** பதில் வழங்குநர்கள் தாம் பெற்றுக் கொள்ள விரும்பும் தடுப்பூசியின் நிலைக்கு இணங்க பெற்றுக் கொள்ள விரும்பாத தடுப்பூசி வகைகள்




*ஆய்வில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான பதில்கள்: கேள்வி 19. நீங்கள் பெற்றுக் கொள்ள விரும்பும் அல்லது பெற்றுக் கொள்ள விரும்பாத ஏதாவதொரு தடுப்பூசியின் பெயரைக் கூற முடியுமா?*

*குறிப்பு: ஒரு பதில்வழங்குநர் ஒன்றுக்கு மேற்பட்ட தடுப்பூசிகளின் பெயரைக் குறிப்பிடலாம். எனவே ஒவ்வொரு வகையான தடுப்பூசியினதும் மொத்த கூட்டுத் தொகையைப் பெற்றுக் கொள்ளும் போது அது பதில் எண்ணிக்கையை விட அதிகமாக இருக்கலாம்.*

*இவ் ஆய்வு 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இருந்து 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரையில் நடத்தப்பட்டது*

## தவறான தகவல்: செய்திகளும் செய்திகளைக் கொண்டு செல்பவர்களும்

- 6 முதல் 11 வரையான விளக்கப்படங்கள், ஆறு செய்திகளுக்கு இடையேயான உடன்படும் வகையில் தடுப்பூசியைப் பெறுவது தொடர்பில், தகவல்கள் மற்றும் தவறான தகவல்கள் மற்றும் அவர்களின் நடத்தை ரீதியான பதில்கள் மற்றும் இன ரீதியான கண்டறிந்த விடயங்களை உள்ளடக்குகின்றன. சமூக ஊடகங்களில் அவற்றின் பரவலின் அடிப்படையில் செய்திகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

- இவ் ஆறு செய்திகளுடன் “முழுமையாக உடன்பட்ட” அல்லது “ஓரளவு உடன்பட்ட” பதில் வழங்குநர்கள் ஒரு டோஸ் தடுப்பூசியையாவது, பெற்றுக் கொள்வதற்கு முன்பு தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாமல் இருப்பதற்கு அல்லது தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்குத் தயங்குவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் என்று பரிந்துரைப்பதற்கு உறுதியான சான்றுகள் உள்ளன.

- தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்கு தயக்கம் காட்டுவதற்கு பங்களிப்பு செய்த ஆறு செய்திகளையும் இரண்டு வகையாக வகைப்படுத்த முடியும். முதலாவது வகை செய்தியானது, இனப்பெருக்கம் மற்றும் பாலியல் ரீதியான அக்கறைகள் தொடர்பான ஆரோககியத்தை அடிப்படையாகக் கொண்ட நம்பிக்கைகள் பற்றியது. இரண்டாவது வகை செய்தியானது, கோவிட்-19 தடுப்பூசி மற்றும் தடுப்பூசி வழங்கும் நடைமுறை தொடர்பான அரசியல் சார்ந்த நம்பிக்கைகள் பற்றியது. கோவிட்-19 தடுப்பூசி குறித்தான தகவல் / ஆலோசனைகளை நாடி நின்ற பதில் வழங்குநர்களது, நண்பர்கள் மற்றும் குடும்ப அங்கத்தவர்கள், இரண்டு வகையான செய்திகளையும் முதன்மையாகப் பரப்பும் பிரதான நபர்களாக இருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.


- பதில் வழங்குநர்கள் மத்தியில் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது குறித்தான தயக்கத்திற்கு பங்களிப்பு செய்த சுகாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட செய்திகளில் மலட்டுத்தன்மை ஏற்படுவது தொடர்பான அச்சம், கர்ப்பிணித் தாய்மார்கள் பக்கவிளைவுகளை அனுபவித்தல் மற்றும் பாலியல் ரீதியான செயல் திறன் தொடர்பான பக்கவிளைவுகள் ஆகியவை அடங்கும். (விளக்கப்படம் 6 முதல் 8 வரை பார்க்கவும்)

- கோவிட்-19 தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதனையும், தடுப்பூசி மீதான நம்பிக்கையையும் பாதகமான முறையில் செல்வாக்குச் செலுத்திய, அரசியல் மயமாக்கப்பட்ட செய்திகளில் இந்த வைரஸ் வலிமை நிறைந்த நாடுகளால் உருவாக்கப்பட்ட ஒரு சதி என்னும் நம்பிக்கை, சீனாவில் தயாரிக்கப்பட்ட தடுப்பூசிகளுடன் ஒப்பிடுகையில் ஐக்கிய அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளில் தயாரிக்கப்படும் தடுப்பூசிகள், அதிக செயல்திறன் வாய்ந்தவை, அரசாங்கத்தின் தடுப்பூசித் திட்டமானது சில சமூகப் பிரிவினருக்கு எதிராக பாகுபாடு காட்டுகின்றது போன்ற விடயங்களை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. (விளக்கப்படம் 10 முதல் 12 வரை பார்க்கவும்)

- 6 செய்திகளின் பகுப்பாய்வானது, சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் பதில் வழங்குநர்கள் எந்தளவிற்கு ஏற்றுக் கொண்டனர் என்பதும் தெரிய வந்தது. இதற்கிணங்க சிங்கள மற்றும் தமிழ் சமூகங்களைச் சேர்ந்த பதில் வழங்குநர்களுடன் ஒப்பிடுகையில், தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதன் விளைவாக இனப்பெருக்க மற்றும் பாலியல் ரீதியான பக்க விளைவுகள் தொடர்பான தவறான கருத்துக்களை முஸ்லிம் பதில் வழங்குநர்கள் அதிகமான நம்புகின்றனர். இவ்வாறன உணர்வை 2021ம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட சமூக ஊடகக் கண்காணிப்பு ஆய்வில், முஸ்லிம்கள் வெளிப்படுத்தினர். அதன்படி, பகிரப்பட்ட கருத்துக்களும் டுவிட்களும் கோவிட்-19 தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் ஒரேமாதிரியான கருத்துக்களாக இருந்தாலும், முஸ்லிம்கள் மத்தியில் தடுப்பூசி மீதான பாதுகாப்புத் தொடர்பில் அதிக சந்தேகம் காணப்பட்டது.

- ஒட்டுமொத்தமாக சிறுபான்மை இன சமூகங்களைச் சேர்ந்த பதில் வழங்குநர்கள் (இலங்கைத் தமிழர்கள், மலைநாட்டுத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள்), கோவிட்-19 தடுப்பூசி மற்றும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளும் நடைமுறை தொடர்பான அரசியல் மயப்படுத்தப்பட்ட செய்திகளை நம்புவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. இச் சமூகங்களில் மலைநாட்டுத் தமிழர்களும் முஸ்லிம்களும் இந்த வைரஸ் வலிமை நிறைந்த நாடுகளால் உருவாக்கப்பட்ட ஒரு சதி என நம்பியதனால் இதுவொரு அபாயகரமான வைரஸ் இல்லை எனவும் நம்புவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்பட்டன. எனவே தடுப்பூசியின் அவசியத்தை அவர்கள் நம்புவது மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது.

**விளக்கப்படம் 6:** 'கோவிட்-19 தடுப்பூசியானது மலட்டுத் தன்மைக்கு வழி வகுக்கலாம்' எனும் தகவலுக்கிணங்க இன ரீதியான வெளிப்பாடு





*ஆய்வில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான பதில்கள்: கேள்வி 7.2*

*1 முதல் 5 வரையிலான புள்ளி வழங்கும் முறை: 1 கடுமையாக இணக்கமில்லை என்பதனைக் குறித்து நிற்க 5 உறுதியாக இணங்குகிறேன் என்பதனைக் குறித்து நிற்கின்றது. கோவிட்-19 தடுப்பூசி குறித்தான பின்வரும் மனப்பாங்குகள் மற்றும் நம்பிக்கைகளுக்கு எவ்வாறு புள்ளி வழங்குவீர்கள் என்பதனைக் குறிப்பிடுங்கள். (ஏற்கனவே செய்தியைக் கேட்டிருந்த பதில் வழங்குநர்களிடத்தில் இக் கேள்வி கேட்கப்பட்டது)*

*குறிப்பு: இவ் ஆய்வு 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இருந்து 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரையில் நடத்தப்பட்டது*

*Icon credit: Cuputo; The Noun Project*

**விளக்கப்படம் 7:** 'கோவிட்-19 தடுப்பூசியானது கர்ப்பிணித் தாய்மாருக்கு பாதுகாப்பற்றது' எனும் தகவலுக்கிணங்க இன ரீதியான வெளிப்பாடு





*ஆய்வில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான பதில்கள்: கேள்வி 7.2*

*1 முதல் 5 வரையிலான புள்ளி வழங்கும் முறை: 1 கடுமையாக இணக்கமில்லை என்பதனைக் குறித்து நிற்க 5 உறுதியாக இணங்குகிறேன் என்பதனைக் குறித்து நிற்கின்றது. கோவிட்-19 தடுப்பூசி குறித்தான பின்வரும் மனப்பாங்குகள் மற்றும் நம்பிக்கைகளுக்கு எவ்வாறு புள்ளி வழங்குவீர்கள் என்பதனைக் குறிப்பிடுங்கள். (ஏற்கனவே செய்தியைக் கேட்டிருந்த பதில் வழங்குநர்களிடத்தில் இக் கேள்வி கேட்கப்பட்டது)*

*குறிப்பு: இவ் ஆய்வு 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாத்தில் இருந்து 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரையில் நடத்தப்பட்டது*

*Icon credit: Cuputo; The Noun Project*

**விளக்கப்படம் 8:** 'கோவிட்-19 தடுப்பூசியானது பாலியல் ரீதியான பக்கவிளைவுகளுக்கு வழி வகுக்கலாம்' எனும் தகவலுக்கிணங்க இன ரீதியான வெளிப்பாடு





ஆய்வில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான பதில்கள்: கேள்வி 7.2

*1 முதல் 5 வரையிலான புள்ளி வழங்கும் முறை: 1 கடுமையாக இணக்கமில்லை என்பதனைக் குறித்து நிற்க 5 உறுதியாக இணங்குகிறேன் என்பதனைக் குறித்து நிற்கின்றது. கோவிட்-19 தடுப்பூசி குறித்தான பின்வரும் மனப்பாங்குகள் மற்றும் நம்பிக்கைகளுக்கு எவ்வாறு புள்ளி வழங்குவீர்கள் என்பதனைக் குறிப்பிடுங்கள். (ஏற்கனவே செய்தியைக் கேட்டிருந்த பதில் வழங்குநர்களிடத்தில் இக் கேள்வி கேட்கப்பட்டது)*

*குறிப்பு: இவ் ஆய்வு 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாத்தில் இருந்து 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரையில் நடத்தப்பட்டது*

Icon credit: Cuputo; The Noun Project

**விளக்கப்படம் 9:** 'கோவிட்-19 தடுப்பூசியானது பலம்வாய்ந்த நாடுகளின் சதியெனவும், இது ஒரு ஆபத்தான லைரஸ் அல்ல' எனும் தகவலுக்கிணங்க இன ரீதியான வெளிப்பாடு





ஆய்வில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான பதில்கள்: கேள்வி 7.2

*1 முதல் 5 வரையிலான புள்ளி வழங்கும் முறை: 1 கடுமையாக இணக்கமில்லை என்பதனைக் குறித்து நிற்க 5 உறுதியாக இணங்குகிறேன் என்பதனைக் குறித்து நிற்கின்றது. கோவிட்-19 தடுப்பூசி குறித்தான பின்வரும் மனப்பாங்குகள் மற்றும் நம்பிக்கைகளுக்கு எவ்வாறு புள்ளி வழங்குவீர்கள் என்பதனைக் குறிப்பிடுங்கள். (ஏற்கனவே செய்தியைக் கேட்டிருந்த பதில் வழங்குநர்களிடத்தில் இக் கேள்வி கேட்கப்பட்டது)*

*குறிப்பு: இவ் ஆய்வு 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாத்தில் இருந்து 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரையில் நடத்தப்பட்டது*

Icon credit: Cuputo; The Noun Project

**விளக்கப்படம் 10:** ‘மேற்கு நாடுகளால் (அமெரிக்கா மற்றும் பிரித்தானியா) உருவாக்கப்பட்ட கோவிட் -19 தடுப்பூசிகளானவை சீன நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட தடுப்பூசிகளைவிட அதிக செயற்றிறன் மிக்கவை’ எனும் தகவலுக்கிணங்க இன ரீதியான வெளிப்பாடு





*ஆய்வில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான பதில்கள் : கேள்வி 7.2*

*1 முதல் 5 வரையிலான புள்ளி வழங்கும் முறை: 1 கடுமையாக இணக்கமில்லை என்பதனைக் குறித்து நிற்க 5 உறுதியாக இணங்குகிறேன் என்பதனைக் குறித்து நிற்கின்றது. கோவிட்-19 தடுப்பூசி குறித்தான பின்வரும் மனப்பாங்குகள் மற்றும் நம்பிக்கைகளுக்கு எவ்வாறு புள்ளி வழங்குவீர்கள் என்பதனைக் குறிப்பிடுங்கள். (ஏற்கனவே செய்தியைக் கேட்டிருந்த பதில் வழங்குநர்களிடத்தில் இக் கேள்வி கேட்கப்பட்டது)*

*குறிப்பு: இவ் ஆய்வு 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாத்தில் இருந்து 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரையில் நடத்தப்பட்டது*

*Icon credit: Cuputo; The Noun Project*

**விளக்கப்படம் 11:** ‘அரசாங்கத்தின தடுப்பூசி வழங்கும் திட்டங்களில் குறிப்பிட்ட சமூகத்தினர் மீதான பாகுபாடு காணிபித்தல்’ எனும் தகவலுக்கிணங்க இன ரீதியான வெளிப்பாடு




*ஆய்வில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான பதில்கள் : கேள்வி 7.2*

*1 முதல் 5 வரையிலான புள்ளி வழங்கும் முறை: 1 கடுமையாக இணக்கமில்லை என்பதனைக் குறித்து நிற்க 5 உறுதியாக இணங்குகிறேன் என்பதனைக் குறித்து நிற்கின்றது. கோவிட்-19 தடுப்பூசி குறித்தான பின்வரும் மனப்பாங்குகள் மற்றும் நம்பிக்கைகளுக்கு எவ்வாறு புள்ளி வழங்குவீர்கள் என்பதனைக் குறிப்பிடுங்கள். (ஏற்கனவே செய்தியைக் கேட்டிருந்த பதில் வழங்குநர்களிடத்தில் இக் கேள்வி கேட்கப்பட்டது)*


*குறிப்பு: இவ் ஆய்வு 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாத்தில் இருந்து 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரையில் நடத்தப்பட்டது*

*Icon credit: Cuputo; The Noun Project*

### அதிகாரிகள் மீதான நம்பிக்கை: கோவிட்-19 தடுப்பூசிகளை விநியோகித்தல், தடுப்பூசிகளை வழங்குதல் போன்ற நடைமுறைகளின் போது பொதுமக்களின் சீரிய நலனில் அக்கறை கொண்டவர்களாக நடந்து கொள்வது யார்?

- விளக்கப்படம் 12 இல் விளக்கப்பட்டுளதனைப் போன்று கோவிட்-19 தடுப்பூசிகளை விநியோகித்தல், தடுப்பூசிகளை வழங்குதல் போன்ற நடைமுறைகளின் போது பொதுமக்களின் சீரிய நலனில் அக்கறை கொண்டவர்களாக நடந்து கொள்பவர்கள் என்னும் விடயத்தில் பதில் வழங்குநர்களுக்கு அரசியல்வாதிகள் மீது குறைந்தளவான நம்பிக்கையே காணப்பட்டது. இப் புள்ளிவிபரங்களில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் உள்நாட்டு அரசியல்வாதிகள் / பராளுமன்ற உறுப்பினர்கள் அடங்குவர்.
- கோவிட்-19 தடுப்பூசிகளை விநியோகித்தல், தடுப்பூசிகளை வழங்குதல் போன்ற நடைமுறைகளின் போது பொதுமக்களின் சீரிய நலனில் அக்கறை கொண்டவர்களாக நடந்து கொள்பவர்கள் என்னும் விடயத்தில் பதில் வழங்குநர்களுக்கு அரசதுறையைச் சேர்ந்த சுகாதாரப் பணியாளர்கள் மீது அதிகளவு நம்பிக்கை காணப்பட்டது. அரசதுறையைச் சேர்ந்த சுகாதாரப் பணியாளர்கள் என்னும் பிரிவிற்குள் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், மாவட்ட சுகாதார மருத்துவ அதிகாரிகள், அரச மருத்துவர்கள் மற்றும் தாதிகள் உள்ளடங்குவர்.

**விளக்கப்படம் 12:** அதிகாரிகள் மீதான நம்பிக்கையின் பரம்பல்





*ஆய்வில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான பதில்கள் : கேள்வி 9*

*1 முதல் 5 வரையிலான புள்ளி வழங்கும் முறை: 1 கடுமையாக இணக்கமில்லை என்பதனைக் குறித்து நிற்க 5 உறுதியாக இணங்குகிறேன் என்பதனைக் குறித்து நிற்கின்றது. கோவிட்-19 தடுப்பூசி குறித்தான பின்வரும் மனப்பாங்குகள் மற்றும் நம்பிக்கைகளுக்கு எவ்வாறு புள்ளி வழங்குவீர்கள் என்பதனைக் குறிப்பிடுங்கள். (ஏற்கனவே செயதியைக் கேட்டிருந்த பதில் வழங்குநர்களிடத்தில் இக் கேள்வி கேட்கப்பட்டது)*

*குறிப்பு: இவ் ஆய்வு 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாத்தில் இருந்து 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரையில் நடத்தப்பட்டது*

- தடுப்பூசி வழங்கும் நடைமுறையில் ஈடுபட்டுவரும் இவ் அதிகாரிகள் மீது பதில் வழங்குநர்கள், கொண்டுள்ள நம்பிக்கையின் அளவை இவ் அதிகாரிகள் மீது பொது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையின் சுட்டிக்காட்டியாக, ஆய்வு பயன்படுத்தியது. எனவே அதிகாரிகள் மீதான அதிக நம்பிக்கை என்பது அதிகாரிகள் மீதான நம்பிக்கை எனவும், அதிகாரிகள் மீதான குறைந்த நம்பிக்கையானது அவநம்பிக்கை எனவும் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதாக பகுப்பாய்வு கருதுகின்றது. இதற்கிணங்க சுகாதாரத் துறையின் அரச அதிகாரிகள் தலைமையிலான கோவிட்-19 தடுப்பூசி தொடர்பான விடயங்களில் ஈடுபடுவதனை பதில் வழங்குநர்கள், நம்புவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுவதாக ஆய்வில் இருந்து கண்டறியப்பட்ட விடயங்கள் தெரிவிக்கின்றன.
- தரவுகள் குறித்தான நெருக்கமான மதிப்பீடானது, அரச அதிகாரிகள் வெளியிட்டுள்ள எண்ணிக்கைகள் குறித்து சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் பதில் வழங்குநர்கள் மத்தியிலான நம்பிக்கையானது பல்வேறு மட்டங்களில் காணப்படுகின்றது என்னும் விடயத்தை வெளிப்படுத்தி உள்ளது. சிங்கள பதில் வழங்குநர்களுடன் ஒப்பிடுகையில் தமிழ் மற்றும் முஸ்லிம் பதில் வழங்குநர்கள், கோவிட்-19 தடுப்பூசிகளை விநியோகித்தல், தடுப்பூசிகளை வழங்குதல் போன்ற நடைமுறைகளின் போது பொதுமக்களின் சீரிய நலனில் அக்கறை கொண்டவர்களாக நடந்து கொள்பவர்கள் என்னும் விடயத்தில் முப்படைகள் மற்றும் பிரதேச செயலாளர் போன்ற பிராந்திய அரசாங்க அதிகாரிகள் மீது கொண்டுள்ள நம்பிக்கையானது மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.[ix] விளக்கப்படம் 13 ஐப் பார்க்கவும்.

**விளக்கப்படம் 13:** முப்படைகள் மற்றும் பிரதேசத்தின் அரச உத்தியோகத்தர்கள் மீதான நம்பிக்கையின் பரம்பல்




*குறிப்பு: இவ் ஆய்வு 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இருந்து 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரையில் நடத்தப்பட்டது*

## கோவிட்-19 தடுப்பூசி மீதான நம்பிக்கை மற்றும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுவதனை ஊக்குவிக்கும் ஒன்லைன் பிரச்சாரம்

2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி அன்று வெரிட்டே நிறுவனத்தின் ஊடகப் பிரிவினரால் (Verité Media) தடுப்பூசி மீதான நம்பிக்கை மற்றும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுவதனை இலங்கைப் பிரஜைகள் மத்தியில் ஊக்குவிக்கும் வகையில், சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் ஒன்லைன் பிரச்சாரத்தை ஆரம்பித்தது. வெரிட்டே நிறுவனத்தின் ஊடகப் பிரிவினரால் கையாளப்பட்டு வரும் இரண்டு தளங்களான Ethics Eye மற்றும் FactCheck.lk ஊடாக பேஸ்புக், டுவிட்டர் மற்றும் இன்ஸ்ட்டாகிராமில் இப் பிரச்சாரம் வெளியிடப்பட்டது.[x]

பின்வரும் விடயங்களானவை, (a) சமூக ஊடகங்களைக் கண்காணித்தல், (b) ஆய்வு (c) உத்தியோகபூர்வ அரச தரவுகள் போன்றவற்றினூடாக கண்டறியப்பட்டு, பிரச்சாரக் கட்டமைப்பை அறிவிப்பதாக அமைந்தது. கோவிட்-19 தடுப்பூசிகள் தொடர்பான தவறான தகவல்களானது, குறிப்பிட்ட சில மக்கள் பிரிவுகள் மத்தியில் தடுப்பூசிகள் மீதான நம்பிக்கை குறைவாக இருப்பதற்கு முக்கிய பங்களிப்பைச் செய்யும் காரணியாக விளங்குகின்றது. எனவே இப்பிரச்சாரமானது, கோவிட்-19 தடுப்பூசிகள் தொடர்பான வதந்திகள், தவறான தகவல்கள், அவநம்பிக்கை என்பவற்றை எதிர்ப்பதில் கவனம் செலுத்துகின்றது. குறிப்பிடத்தக்க வகையில் கோவிட்-19 தடுப்பூசிகள் மீதான குறைந்தளவான நம்பிக்கையின் காரணமாக பாதகமான ஒரு தாக்கத்தை எற்படுத்தி உள்ளது. பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்தவற்கு செல்லும் தனி நபர்களின் எண்ணிக்கையானதுமிகவும் குறைவானதாகக் காணப்படுவதற்கு "ஒழுங்கமைக்கப்பட்ட" தவறான தகவல்களைப் பிரச்சாரம் செய்வதே காரணம் என அதிகாரிகள் குற்றஞ்சாட்டி உள்ளனர்.[xi]

பிரச்சாரமானது, தடுப்பூசியுடன் தொடர்புடைய உடல்நலம் சார்ந்த தவறான கருத்துக்களில் இரண்டு பிரதான கருத்துக்கள் மீது முக்கிய கவனம் செலுத்துகின்றது. (1) தடுப்பூசியைப பெற்றுக் கொள்வதன் விளைவாக ஏற்படக் கூடிய இனப்பெருக்கம் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் பாலியல் ரீதியான பிரச்சினைகள் குறித்தான அச்சம் (குறிப்பாக மலட்டுத்தன்மை ஏற்படுதல் மற்றும் பாலியல் ரீதியான செயலிழப்பு குறித்தான பயம்); (2) தடுப்பூசியைப பெற்றுக் கொள்வதன் விளைவாக ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகள் குறித்தான அச்சம்.

இவ் இரண்டு தவறான கருத்துக்களையும் நிவர்த்தி செய்வதற்கு வெரிட்டே நிறுவனத்தின் ஊடகத் துறையானது சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் உடல்நலம் சார்ந்த தவறான கருத்துக்களைப் பகிரங்கமாக மறுக்கும் இலங்கை மருத்துவர்களின் பயனுள்ளதும் பொருத்தமானதுமான வீடியோ கிளிப்களை உபயோகித்துள்ளது. தடுப்பூசி வழங்கும் செயல் திட்டத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய அதிகாரிகளை விட, அரச மருத்துவர்கள் மீதும் தாதியர் மீதும் பொதுமக்கள் அதிகளவான நம்பிக்கை வைத்திருப்பதாக ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்துவதனாலேயே இவ் வீடியோ கிளிப்புகள் தெரிவுசெய்யப்பட்டன.

31 வயதிற்குக் குறைந்த இணையத்தள பயன்படுத்துநர்களையே இப் பிரச்சாரம் தனது இலக்காகக் கொண்டது. தெரிவு செய்யப்பட்ட வயதெல்லையானது, ஆய்வில் இருந்து கண்டறியப்பட்ட விடயங்களோடு பொருந்துவதாக இருந்தது. அதாவது பதில் வழங்குநர்களில் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாதவர்களது சராசரி வயதெல்லையான 31 வயதிற்குக் குறைவாக இருப்பதனை வெளிப்படுத்தியது. இது தடுப்பூசியின் இரண்டாவது டோசைப் பெற்றுக் கொள்வதற்குச் சென்றவர்களது தொகை 60% இற்கும் குறைவாக உள்ள மாவட்டங்கள் மற்றும் நகரங்களில் உள்ள ஒன்லைன் பாவனையாளர்களை இலக்காகக் கொண்டதோடு, தடுப்புசியைப் பெற்றுக் கொள்வது தொடர்பான தயக்கத்தை வெளிப்படுத்தும் அறிகுறிகளை எடுத்துக்காட்டுவதற்காக முக்கிய

ஊடகங்களில் அம் மாவட்டங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டன.[xii] [3] இந் நோக்தக்திற்காக கொழும்பு, கிளிநொ்சசி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, களுத்துறை மாவட்டங்களும் கல்முனை நகரமும் தெரிவுசெய்யப்பட்டன. இலக்காக் கொள்ளப்பட்ட நபர்களையும் இடங்களையும் சென்றடையக் கூடிய வகையில் வெரிட்டே நிறுவனத்தின் ஊடகப் பிரிவினரால் தமது முகப்புத்தக மற்றும் இன்ஸ்டாகிராம் பக்கங்களை ஏற்கனவே விரும்புவோருக்கு மேலதிகமான பாவனையாளர்களைச் சென்றடையக்கூடிய கூடிய வகையில் விரிவுபடுத்தியது.[4]

**21.03.2022 இல் உள்ள ஒவ்வொரு தளத்திலும் வீடியோக்களின் அடைவு மட்டம் கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது:**

| காணொளி | வெளியீட்டுத் திகதி | பேஸ்புக் அடைவு | | | டுவிட்டர் அடைவு | | | இன்டாகிராம் அடைவு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | வெரிட்டே ரிசர்ச் | Fact-Check.lk | Ethics Eye | வெரிட்டே ரிசர்ச் | Fact-Check.lk | Ethics Eye | |
| பாலியல் பிரச்சினைகள் தொடர்பான அச்சம் (தமிழ்) | 22.02.2022 | 79,405 | 30,937 | 131 | 473 | 187 | 42 | 20,403 |
| பாலியல் பிரச்சினைகள் தொடர்பான அச்சம் (சிங்களம்) | 22.02.2022 | 108,215 | 1,196 | 175 | 380 | 262 | 46 | 27,296 |
| பாதகமான பக்கவிளைவுகள் தொடர்பான அச்சம் (தமிழ்) | 10.03.2022 | 1,191 | 4,694 | 193 | (FactCheck.lk யிடமிருந்து மீளவும் டுவீட் செய்யப்ப-ட்டவை) | 181 | 57 | 11,248 |
| பாதகமான பக்கவிளைவுகள் தொடர்பான | 10.03.2022 | 4,734 | 2,313 | 1,342 | (FactCheck.lk யிடமிருந்து மீளவும் டுவீட் செய்யப்ப-ட்டவை) | 946 | 83 | 13,282 |

## முடிவுரை

இவ் ஆய்வானது, இலங்கையில் சிங்கள, தமிழ் மற்றும், முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் கோவிட்-19 தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் கோவிட்-19 தடுப்பூசி மீதான நம்பிக்கை, தடுப்பூசி நிலையங்களை அணுகுதல் போன்ற விடயங்கள் தொடர்பான உரையாடல்களையும், அணுகுமுறைகளையும் ஆராய்வதாக அமைந்தது. இலங்கையில், கோவிட்-19 தொற்று கண்டுபிடிக்கப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்த பின்னரும் கூட, கோவிட்-19 தடுப்பூசியை மக்கள் பெற்றக் கொள்வதனையும் கோவிட்-19 தடுப்பூசி மீதான நம்பிக்கை அதிகமாகக் காணப்படுவதனை தடுக்கும் வகையில் தவறான கருத்துக்கள் பரப்பும் நிலை நீடித்து வருவதாக ஆய்வில் இருந்து கண்டறியப்பட்ட விடயங்கள் தெரிவிக்கின்றன. எவ்வாறாயினும், இத் தவறான கருத்துக்களானது, நாடு முழுவதிலும் உள்ள சில நிலைமைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாகக் காணப்படுவதோடு சிறுபான்மை இனக் குழுக்கள் மத்தியில் அதிகமாகக் காணப்படுகின்றது.

இவ் ஆய்வில் இருந்து கண்டறியப்பட்ட விடயங்களானவை, கோவிட்-19 தடுப்பூசி தொடர்பாக இலங்கையின் முக்கிய இனக்கழுக்கள் வைத்துள்ள மனப்பான்மை மற்றும் நம்பிக்கைகளைப் புரிந்து கொள்வதற்கு பங்களிப்பு செய்யக் கூடும். மிக முக்கியமாக கோவிட்-19 தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் கோவிட்-19 தடுப்பூசி மீதான நம்பிக்கை என்பவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஏனைய காரணிகளோடு, இத் தவறான நம்பிக்கைகளின் விளைவுகளையும் இவ் ஆய்வு கோடிட்டுக் காட்டுகின்றது. தடுப்பூசி மீதான தயக்கத்தை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளில் இனம் மற்றும் மதத்தைச்சுற்றியுள்ள பிரச்சினைகளை அடையாளங்காணத் தவறுவது, சிறுபான்மைச் சமூகங்களின் குறிப்பிட்ட அனுபவங்கள் மற்றும் அணுகுமுறைகளுடன் தொடர்புடைய முக்கியமான வேறுபாடுகள் விடுபடுவதற்கு வழிவகுக்கலாம். ஆய்வில் இருந்து கண்டறியப்பட்ட விடயங்களானவை, குறிப்பாக இலங்கையின் சூழ்நிலைகளுக்குப் பொருந்துவதாகக் காணப்பட்ட போதிலும் தவறான கருத்துக்களானவை உலகம் முழுவதிலும் உள்ள மக்களுக்குப் பொதுவானதாக இருக்கலாம். எனவே, இத்தகைய சூழந்லை சார்ந்த காரணிகளைக் கொண்ட அல்லது இத்தகைய தவறான கருத்துக்களை எதிர்கொள்ளும் நாடுகளுக்கும், கோவிட்-19 தடுப்பூசியை உலகலாவிய ரீதியில் மக்கள் பெற்றுக் கொள்வதனை விருத்தி செய்யும் வகையிலும், பயனுள்ள கருத்துப் பரிமாற்றங்கள், பிரச்சாரங்கள், இடையீடுகளைச் செய்தவற்கான உபாயங்கள், போன்றவற்றை வடிவமைத்துக் கொள்வதற்கு இவ் ஆய்வில் இருந்து கண்டறியப்பட்ட விடயங்களைத் தெரிவிக்கலாம்.

3 பிரச்சாரம் தொடங்கப்பட்ட நேரத்தில் தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்கள் மற்றும் நகரங்களில் குறைந்தளவு தடுப்பூசி விகிதங்கள் மற்றும்/அல்லது தயக்கத்தின் அறிகுறிகளைக் கொண்ட பகுதிகளாக அடையாளம் காணப்பட்டன. இந்த பகுதிகளில் பிரச்சாரம் தொடங்கப்பட்டதிலிருந்து தடு-ப்பூசி விகிதங்கள் அதிகரித்திருக்கலாம்

4 Verité Media ஒரு செய்தி வெளியீட்டாளர் இல்லை.அத்துடன், டுவிட்டரின் அரசியல் உள்ளடக்க விளம்பரக் கொள்கையிலிருந்து விலக்கு அளி-க்கப்படவில்லை, அதன் காரணமாக, டுவிட்டரில் கோவிட்-19 தொடர்பான உள்ளடக்கத்தை விளம்பரம்செய்ய முடியவில்லை.

## இறுதி குறிப்புக்கள்


i. அரச புலனாய்வு சேவை 'கோவிட்-19 தடுப்பூசி இலங்கை அணுகுமுறை', இலங்கை ஜனாதிபதி செயலகம், 24 ஆகஸ்ட் 2021, தகவல்களை பெற்றுக்கொள்ளக் கூடிய இணையத்தளம் http://www.presidentsoffice.gov.lk/.Documents/Concept%20Paper-COVID%2019_Vaccination-Sri_Lankan_Approach.pdf இறுதியாக அணுகிய திகதி மார்ச் 1, 2022.

ii. வெரிட்டே ரிசர்ச்சின் Factcheck.lk (2022), 'கெஹலிய ரம்புக்வெல்ல: ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன', ஜனவரி, பெற்றுக்கொள்ளக் கூடிய இணையத்தளம் http://factcheck.lk/claim/keheliya-rambukwella-6 இறுதியாக அணுகிய திகதி மார்ச் 1, 2022.

iii. 'ஒமிக்ரோன் பரவும் நிலையில், பூஸ்டர் பெற்றுக்கொள்வதிலுள்ள தயக்கம் குறித்து இலங்கை சுகாதார அதிகாரிகள் கவலையடைந்துள்ளனர்', EconomyNext, 6 ஜனவரி 2022, தகவல்களை பெற்றுக்கொள்ளக் கூடிய இணையத்தளம் https://economynext.com/sri-lanka-health-authorities-worried-over-booster-hesitancy-as-omicron-spreads-89373/ இறுதியாக அணுகிய திகதி மார்ச் 1, 2022.

இலங்கையில் பரவும் தடுப்பூசி தயக்கம்: ஒழுங்கமைக்கப்பட்ட பிரச்சாரத்தை அதிகாரிகள் குற்றம் சாட்டுகிறார்கள், நுஉழெழஅலநேஓவ, செப்டம்பர் 28, 2021, தகவல்களை பெற்றுக்கொள்ளக் கூடிய இணையத்தளம் https://economynext.com/creeping-vaccine-hesitancy-in-sri-lanka-authorities-blame-organised-campaign-86540/ இறுதியாக அணுகிய திகதி மார்ச் 1, 2022.

iv. இலங்கை மத்திய வங்கி, 'ஆண்டு அறிக்கை 2020 – அத்தியாயம் 3' தகவல்களை பெற்றுக்கொள்ளக் கூடிய இணையத்தளம்https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2020/en/7_Chapter_03.pdf இறுதியாக அணுகிய திகதி மார்ச் 1, 2022.

v. இலங்கை மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், 'கணினி எழுத்தறிவு புள்ளிவிபரம்' (ஜனவரி முதல் டிசம்பர் 2020), தகவல்களை பெற்றுக்கொள்ளக் கூடிய இணையத்தளம் http://www.statistics.gov.lk/Resource/en/ComputerLiteracy/Bulletins/AnnualBuletinComputerLiteracy-2020#:~:text=Overall%20Computer%20Literacy%20reported%20in,between%202017%20to%202020%20periodஇறுதியாக அணுகிய திகதி மார்ச் 1, 2022.

vi. முன்னைய குறிப்பில் குறிப்பிடப்பட்ட மேற்கோள்.

vii. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கைலக்கழகம் இலங்கையின் இணையத்தளம் "இலங்கையில் 95.8 வீதமான கொவிட் 19 நோய்த் தொற்றுக்களுக்கு டெல்டா திரிபே காரணமாக இருந்தது – 'ஒவ்வாமை, நோயெதிர்ப்பு, உயிரணு உயிரியல் பிரிவு, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் இலங்கை', 2021 செப்டெம்பர் 9 தகவல்களை பெற்றுக் கொள்ளக் கூடிய இணையத்தளம் https://www.sjp.ac.lk/news/delta-variant-was-responsible-for-95-8-of-covid-19-infections-in-sri-lanka-allergy-immunology-cell-biology-unit-usj/இறுதியாக அணுகிய திகதி மார்ச் 1, 2022.

இலங்கையின் சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு, 'கொரோனா வைரஸ் நோய் 2019 (கோவிட்-19)—நிலைமை அறிக்கை—16.12.2021—காலை 10 மணி.' https://epid.gov.lk/web/images/pdf/corona_virus_report/sitrep-sl-en-16-12_10_21.pdf இறுதியாக அணுகிய திகதி மார்ச் 1, 2022.

viii. யுமிக்கோ பெரேரா, 'துரிதப்படுத்தப்பட்ட கோவிட்-19 தடுப்பூசி வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தில் பாரிய முன்னேற்றம், The Morning, தகவல்களை பெற்றுக் கொள்ளக் கூடிய இணையத்தளம் https://www.themorning.lk/covid-19-vaccination-programme-great-progress-through-accelerated-drive/ இறுதியாகஅணுகிய திகதி மார்ச் 1, 2022.

ix. மொனராகலை மாவட்டச் செயலகத்தின் இணையத்தளம், தகவல்களை பெற்றுக் கொள்ள, http://monaragala.dist.gov.lk/index.php/en/ இறுதியாக அணுகிய திகதி மார்ச் 1, 2022.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் இணையத்தளம், தகவல்களை பெற்றுக் கொள்ள, Divisional Secretariat—Jaffna—Home(ds.gov.lk) இறுதியாக அணுகிய திகதி மார்ச் 1, 2022.

x. வெரிட்டே ரிசர்ச் நிறுவனத்தின் Factcheck.lk இணையதளத்தின் முகப் புத்தகப் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள "கோவிட்-19 தடுப்பூசி தொடர்பான தவறான தகவல்களை எதிர்த்தல்," தகவல்களை பெற்றுக் கொள்ள, https://fb.watch/bTiMVmESM9/, https://fb.watch/bw31Dabf-7/, https://fb.watch/bZKi70bWcl/ மற்றும் https://fb.watch/bZKi70bWcl/ மற்றும் https://fb.watch/bTiUc-KI01/ இறுதியாக அணுகிய திகதி மார்ச் 23, 2022.

வெரிட்டே ரிசர்ச் நிறுவனத்தின் Factcheck.lk இணையதளத்தின் டுவிட்டர் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள 'கோவிட்-19 தடுப்பூசி தொடர்பான தவறான தகவல்களை எதிர்த்தல்' தகவல்களை பெற்றுக் கொள்ள,https://twitter.com/factchecklka/status/1495944455379365892, https://twitter.com/factchecklka/status/1495944926294597638, https://twitter.com/factchecklka/status/1501900 941729034242 மற்றும் https://twitter.com/factchecklka/status/15019022 75320578049 இறுதியாக அணுகிய திகதி மார்ச் 23, 2022.

Ethics Eye இன் முகப் புத்தகப் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள 'கோவிட்-19 தடுப்பூசி தொடர்பான தவறான தகவல்களை எதிர்த்தல்,' தகவல்களை பெற்றுக் கொள்ள, https://fb.watch/bWFUCq8HZS/, https://fb.watch/bw3cU_qV9s/, https://fb.watch/bWI_Jh9ijg/ மற்றும் https://fb.watch/bWJ0gIFLM0/ இறுதியாக அணுகிய திகதி மார்ச் 23, 2022.

Ethics Eye இன் டுவிட்டர் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள 'கோவிட்-19 தடுப்பூசி தொடர்பான தவறான தகவல்களை எதிர்த்தல்,' தகவல்களை பெற்றுக் கொள்ள, https://twitter.com/EthicsEye/

status/1495968202244902912, https://twitter.com/EthicsEye/status/1495969980734660608, https://twitter.com/EthicsEye/status/1504652 459032997892 மற்றும் https://twitter.com/EthicsEye/status/1504654820967268366 இறுதியாக அணுகிய திகதி மார்ச் 23, 2022.

வெரிட்டே ரிசர்ச் நிறுவனத்தின் இணையத்தளமான Factcheck.lk இன் டுவிட்டர் பக்கத்தில் 'கோவிட்-19 தடுப்பூசி தொடர்பான தவறான தகவல்களை எதிர்த்தல்,' தகவல்களை பெற்றுக் கொள்ள, https://fb.watch/bWGrl_UzEk/, https://fb.watch/c2Acp45jEK/, https://fb.watch/bWGAykUyxL/ யனெ https://fb.watch/bWGxMPUlaT/ இறுதியாக அணுகிய திகதி மார்ச் 23, 2022.

வெரிட்டே ரிசர்ச் நிறுவனத்தின் டுவிட்டர் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள 'கோவிட்-19 தடுப்பூசி தொடர்பான தவறான தகவல்களை எதிர்த்தல்,' தகவல்களை பெற்றுக் கொள்ள, https://twitter.com/VeriteResearch/status/1495989229230465025, https://twitter.com/VeriteResearch/status/1495989582743347203 இறுதியாக அணுகிய திகதி மார்ச் 23, 2022.

வெரிட்டே ரிசர்ச் நிறுவனத்தின் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள 'கோவிட்-19 தடுப்பூசி தொடர்பான தவறான தகவல்களை எதிர்த்தல்,' தகவல்களை பெற்றுக் கொள்ள, https://bit.ly/36f4wqM, https://bit.ly/3D8w10X, https://bit.ly/36jDzlu மற்றும் https://bit.ly/3ulH17h

**xi.** 'பயவுணர்வைப் பரப்புதல் இலங்கையில் தடுப்பூசி பெற்றுக் கொள்வதில் தயக்கத்தை அதிகரிக்க வழிவகுத்தது: மருத்துவர் சங்கம்,' நுஉழமெஅலநேஒவ, டிசம்பர் 29, 2021, தகவல்களை பெற்றுக்கொள்ளக் கூடிய இணையத்தளம் https://economynext.com/creeping-vaccine-hesitancy-in-sri-lanka-authorities-blame-organised-campaign-86540/ இறுதியாக அணுகிய திகதி மார்ச் 1, 2022.

"இலங்கையில் பரவும் தடுப்பூசி மீதான தயக்கம்: ஒழுங்கமைக்கப்பட்ட பிரச்சாரத்தை அதிகாரிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்,' EconomyNext, டிசம்பர் 28, 2021, தகவல்களை பெற்றுக்கொள்ளக் கூடிய இணையத்தளம் https://economynext.com/creeping-vaccine-hesitancy-in-sri-lanka-authorities-blame-organised-campaign-86540/ இறுதியாக அணுகிய திகதி மார்ச் 1, 2022.

**xii.** 'இலங்கையில் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதற்கான சுதந்திரமான நடவடிக்கைகள்' இணையத் தளத்தில் உள்ள தடுப்பூசி வழங்கல் தொடர்பான புள்ளிவிபரங்கள், தகவல்களை பெற்றுக்கொள்ளக் கூடிய இணையத்தளம் https://covid19.gov.lk/vaccination-statistics.html இறுதியாக அணுகிய திகதி மார்ச் 1, 2022.

இலங்கை சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இணையத் தளம், தகவல்களை பெற்றுக்கொள்ள, https://www.epid.gov.lk/web/index.php?lang=en இறுதியாக அணுகிய திகதி மார்ச் 1, 2022.

**நன்றியுரை**

இவ் ஆய்வானது சர்வதேச சிறுபான்மை உரிமைகள் குழுவிற்காக வெரிட்டே நிறுவனத்தின் ஊடகக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டது. வன்கார்ட் ஆய்வானது, (Vanguard Survey Private Limited) ஆய்வை நடைமுறைப்படுத்தும் பங்குதாரராக விளங்கியது. மஹோஷதி பீரிஸ் அவர்கள் இவ் ஆய்வின் பிரதான ஆய்வாளராகவும் பிரதான ஆசிரியராகவும் விளங்குகின்றார். ரத்திக்கா பர்னாந்து அவர்கள் இவ் ஆய்வின் முகாமையாளராக விளங்குகின்றார். ஆய்வின் தரவுகள் தொடர்பான அளவை மதிப்பீட்டை, முன்னணி தரவு ஆய்வாளர் அஷ்வின் பெரேரா வழங்கி உள்ளார். ரத்திக்கா பர்னாந்து, தேஷித்த கதிரகொன்ன, ஷிஹாரா பர்னாந்து மற்றும் கௌரி சாமுவேல் ஆகியோர் ஆய்விற்கான பூர்வாங்க ஆதரவை நல்கி உள்ளனர். இவ் ஆய்வின் மொழித் தொகுப்பு ஸ்டெபனி நிக்கோல் மற்றும் சுரேஷ் யோகசுந்தரம் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டது. நிஷான் டிமெல் மற்றும் தீபாஞ்சலி அபேவர்தன ஆகியோரால் ஒட்டுமொத்த ஆய்வு மேற்பார்வை வழங்கப்பட்டது. விளக்கப்படங்களை நிலங்கிகா பர்னாந்து அவர்கள் வழங்கி உள்ளதோடு தினுக் சேனாபத்திரன அவர்கள் வடிவமைப்பை மேற்கொண்டுள்ளார். வரைவு ஆவணங்களையும் எண்ணக் கருத்துக்களையும் மீளாய்வு செய்தல், தமது கருத்துக்களைத் தெரிவித்தல் போன்றவற்றுக்காக தமது நேரத்தைச் செலவிட்ட மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு தனிநபருக்கும் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதற்கு ஆசிரியர் கடமைப்பட்டவராக விளங்குகின்றார்.

minority rights group international

இந்த உள்ளடக்கம் வெரிட்டே ரிசர்ச்சின் முழுப் பொறுப்புடைமையாகும். எந்த சூழ்நிலையிலும் சர்வதேச சிறுபான்மை உரிமைகள் குழுவின் நிலைப்பாட்டை பிரதிபலிப்பதாக கருதப்படக்கூடாது